பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 03 2026 6 45**

**திங்கட்கிழமை காலை**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அசாம், கேரளம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

2. புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக - காங்கிரஸ் இடையே கூட்டணி அமைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

3. தமிழகத்தில் வாக்காளர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதை கண்காணித்து தடுக்க 24 மணி நேரமும் செயல்படும் மத்திய கட்டுப்பாட்டு மையம் சென்னையில் திறக்கப்பட்டுள்ளது.

4. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று மக்களவையில் நிறுவன சட்டதிருத்த மசோதாவை தாக்கல் செய்ய உள்ளார்.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை - கோவா அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>

**அசாம், கேரளம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.**

**இந்த இரண்டு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன்பிரதேசத்தில் அடுத்த மாதம் 9-ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.**

**வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை மேற்கொள்ளப்படும்.**

**வேட்புமனுக்களைத் திரும்பப் பெற வரும் 26ஆம் தேதி கடைசி நாளாகும்.**

**தமிழ்நாட்டில் ஏப்ரல் 23-ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும்.**

**மேற்கு வங்கத்தில் ஏப்ரல் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடத்தப்படும்.**

தமிழ்நாடு மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிக்கை இந்த மாதம் 30-ஆம் தேதி வெளியிடப்படும்.

மேற்குவங்கத்தின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான அறிவிக்கை ஏப்ரல் 2-ஆம் தேதி வெளியிடப்படும்.

126 உறுப்பினர்களைக் கொண்ட அசாம் சட்டப்பேரவையின் பதவிக்காலம் மே 20-ஆம் தேதியுடனும், 140 உறுப்பினர்களைக் கொண்ட கேரள சட்டப்பேரவையின் பதவிக்காலம் மே 23-ஆம் தேதியுடனும் முடிவடைகிறது.

30 உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி சட்டப்பேரவை ஜூன் 15-ஆம் தேதியுடன் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்கிறது.

இந்நிலையில் 140 தொகுதிகளைக் கொண்ட கேரளத்தில் இதுவரை 341 வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர்.

இன்று கடைசி நாள் என்பதால் கூடுதலாக மனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக - காங்கிரஸ் இடையே கூட்டணி அமைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

இன்று வேட்புமனு தாக்கல் நிறைவடைய உள்ள நிலையில் இரு கட்சிகளும் கூட்டணி மற்றும் தொகுதிப் பங்கீடு குறித்து இறுதி முடிவுக்கு வரவில்லை.

இரு கட்சிகளை சேர்ந்தவர்களும், கூட்டணி கட்சிகளும் தாங்கள் போட்டியிட விரும்பும் தொகுதிகளில் மனுதாக்கல் செய்துள்ளனர்.

மனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 26ஆம் தேதி கடைசி நாள் என்பதால் அதற்குள் கூட்டணி இறுதி செய்யப்பட்டுவிடும் என்று காங்கிரஸ் மற்றும் திமுக தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்டுள்ளது.

புதுச்சேரி மாநிலத்தின் 30 தொகுதிகளிலும் அக்கட்சி தனித்துப் போட்டியிடுகிறது.

இது குறித்து த.வெ.க தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்தமாதம் 9ஆம் தேதி நடைபெற உள்ள புதுச்சேரி

சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தமது கட்சி தனித்துப் போட்டியிடுவதாக கூறியுள்ளார்.

**30** சட்டமன்றத் தொகுதிகளுக்கும் விருப்ப மனு அளித்தவர்களில் இருந்து தகுதியான வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சுதந்திரமான நியாயமான சட்டப்பேரவைத் தேர்தலை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி ஆணையரகம், **24** மணி நேரமும் செயல்படும் மத்திய கட்டுப்பாட்டு மையத்தை சென்னையில் திறந்துள்ளது.

முறைகேடாக தேர்தல் சலுகைகள் வழங்கப்படுவதைத் தடுக்கவும், தேர்தல் விதிமுறைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்யவும் இந்த மையத்தின் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டலத்தின் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி முதன்மைத் தலைமை ஆணையர் கூறியுள்ளார்.

இந்த அலுவலகம் பறக்கும் படைகளையும் நிலையான கண்காணிப்புக் குழுக்களையும் அமைத்து வாகன சோதனைகளை நடத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்கள், திருமண மண்டபங்களை கண்காணிக்கவும் குழுக்களை அமைத்து இந்த கட்டுப்பாட்டு அலுவலகம் செயல்படவுள்ளது.

இதனிடையே வாக்காளர்களுக்கு வழங்க பரிசுப் பொருட்களை பதுக்கி வைப்பதைத் தடுப்பதற்காக, கிடங்குகளையும் பண்டகசாலைகளையும் நிலையான கண்காணிப்புக்குழுக்கள் கண்காணித்து வருகின்றன.

தமிழகத்தை கர்நாடகா, கேரளா, ஆந்திரப்பிரதேசத்துடன் இணைக்கும் முக்கிய தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்வட்ட சாலைகளிலும், தேர்தல் தொடர்பான பரிசுப் பொருட்களின் நடமாட்டத்தை தடுக்க பறக்கும் படைகள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

<<<<>>>>

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று மக்களவையில் நிறுவனச் சட்டத் திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த உள்ளார்.

வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மைச் சட்டம் 2008 மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013 ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.

இது தவிர, 2026ஆம் ஆண்டுக்கான நிதி மசோதாவும் அவையின் இன்றைய அலுவல் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

மாநிலங்களவையில், இன்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய ஆயுதக் காவல் படை பொது நிர்வாக மசோதாவை அறிமுகப்படுத்த உள்ளார்.

மத்திய ஆயுதக் காவல் படைகளில் உள்ள குரூப்-ஏ அதிகாரிகள் மற்றும் இதர அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் சேவைகளை ஒழுங்குபடுத்தும் பொதுவான விதிகள் மற்றும் அந்தப் படைகள் தொடர்பான பிற விதிகளை வகுக்க இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.

<<<<>>>>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி மாவட்டங்களில் இன்று லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பிற பகுதிகள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை அதிகபட்ச வெப்பநிலை 34 முதல் 35 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 முதல் 26 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தெற்கு பசிபிக் கடலில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6 புள்ளி ஒன்றாக பதிவானது.

------------

மேற்காசியாவில் அணுசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதை அனைத்து தரப்பினரும் தவிர்க்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் திரு. Tedros Adhanom கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

ராஜஸ்தானில் **Chabua** விமானப் படைத்தளத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் பாகிஸ்தானிடம் முக்கியமான தகவல்களை பகிர்ந்துகொண்டதாக காவல்துறையால் கைது செய்யப்பட்டார்.

------------

சட்டப்பேரவைத் தேர்தலில் **100** சதவீத வாக்களிப்பை உறுதி செய்யும் வகையில் விழுப்புரத்தில் நேற்று நடைபெற்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ஷேக் அப்துல் ரகுமான் துவக்கி வைத்தார்.

------------

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை கனிணி குலுக்கல் முறையில் பிரித்தளிக்கும் பணி இன்று நடைபெற உள்ளது.

------------

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே தனியார் கல்குவாரியில் அழுகிய நிலையில் வாலிபர் ஒருவரின் சடலத்தை காவல்துறையினர் மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

------------

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே தடுப்பணையில் தேங்கியிருந்த நீரில் மீன்பிடிக்கச் சென்று கூலித் தொழிலாளி தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார்.

------------

திருவாரூரில் நேற்று உரிய ஆவணங்களின்றி லாரியில் எடுத்துச் செல்லப்பட்ட ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 550 ரூபாய் மதிப்பிலான செல்ஃபோன் உதிரி பாகங்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

------------

சட்டப்பேரவைத் தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் சென்னை மெரீனா கடற்கரையில் நேற்று விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

------------

சென்னையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் கடந்த 2 நாட்களில் முறையான

ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட **60** லட்சத்து **63** ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை - கோவா அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் **1-1** என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மற்றொரு போட்டியில் பெங்களூரு அணி **3-1** என்ற கோல் கணக்கில் காசி அணியை வென்றது.

--------------

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபய் சிங் மற்றும் அனாகத் சிங் பட்டம் வென்றனர்.

மும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அபய் சிங் - இந்தியாவின் வீர் சோட்ரானி-ஐ வென்று பட்டத்தை கைப்பற்றினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அனாகத் சிங் - எகிப்தின் **Hana Moataz** வென்றார்.

--------------

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர்ச் சூழலைக் கருத்தில் கொண்டு, ஃபிடே மகளிர் கேண்டிடேட்ஸ் செஸ் தொடரிலிருந்து விலகவுள்ளதாக இந்திய கிராண்ட்மாஸ்டர் கோனெரு ஹம்பி அறிவித்துள்ளார்.

இந்த தொடர் சைப்ரஸில் மார்ச் **28** முதல் ஏப்ரல் **16** வரை நடைபெறவுள்ளது.

இது குறித்து சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ள கோனெரு ஹம்பி, பாதுகாப்பு உத்தரவாதங்கள் அளிக்கப்பட்ட போதிலும், சொந்த காரணங்களால் இந்தத் தொடரிலிருந்து விலகுவதாகவும், இது ஒரு கடினமான ஆனால் அவசியமான முடிவு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<The End>>>>**